III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.284/2019

Deposition of witness for the Plaintiff/PW2
Respondent solemnly by Tmt. R.Santhi, Translator
in accordance with the provision of Act I for 1873 on 02-07-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : முத்துராஜ் | Village | : |
| Father's Name | : தங்கராஜ் | Calling | : |
| Age | : | Taluk | : |

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

நான் 5 ஆம் வகுப்பு படித்திருக்கின்றேன். என்னுடைய தகப்பனார் தங்கராஜ் கோயம்பேடு காமராஜர் மலர் அங்காடி எம்.ஏ.எஃப்.79 என்ற கடையில் பூ வியாபாரம் செய்து வருகின்றார் என்றால் நான் தான் வியாபாரம் செய்து வருகின்றேன். நான் கோயம்பேடு மார்கெட்டில் உள்ள பூ மற்றும் காய்கனி மார்க்கெட்டில் உள்ள வியாபாரிகளிடம் வட்டிக்கு பணம் கொடுத்து வசூல் செய்யும் வேலை செய்து வருகின்றேன் என்றால் சரியல்ல. நானும் வாதியும் சேர்ந்து தான் வட்டிக்கு பணம் கொடுத்து வசூல் செய்யும் வேலை செய்து வருகின்றோம் என்றால் சரியல்ல. அப்படி பணம் திரும்ப தராதவர்களிடம் நானும் வாதியும் ரவுடிகளோடு சேர்ந்து கட்டபஞ்சாயத்து செய்வோம் என்றால் சரியல்ல. அந்த வகையில் 18.05.2019 ல் வாதியும் நானும் சேர்ந்து அடியாட்களோடு 1ம் பிரதிவாதி வீட்டிற்கு சென்று பணம் கேட்டு மிரட்டி அடித்தோம் என்றால் சரியல்ல. அதனைத் தொடர்ந்து 21.05.2019 அன்று 1ம் பிரதிவாதியை நானும் வாதி மற்ற அடியாட்களோடு கடத்தி சென்று ஏற்கனவே தயார் செய்யப்பட்ட 6 எண்ணிக்கைகள் கொண்ட 20 ரூபாய் முத்திரரைத் தாள் மற்றும் 5 கிரீன் ஷீட் 10 white sheet ல் நானும் வாதியும் கையொப்பம் பெற்றோம் என்றால் சரியல்ல. நான் சாட்சி கையொப்பம் கிரையப்பத்திரத்தில் போட்டேனா அல்லது கிரைய ஒப்பந்த பத்திரத்தில் போட்டேனா என்றால் கிரைய ஒப்பந்த பத்திரத்தில் சாட்சி கையொப்பம் போட்டேன். பணம் கொடுத்த அழகர்சாமியும் பணம் வாங்கி சிவக்குமாரும் சேர்ந்து என்னை சாட்சி கையொப்பம் போட அழைத்துச் சென்றார்கள். 1ம் பிரதிவாதியை வாதியும் நானும் மற்ற

அடியாட்களும் கடத்தி சென்றதாக 1ம் பிரதிவாதி ஜே.ஜே.நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு புகார் கொடுத்ததற்கு காவல் நிலையத்தில் சி.எஸ்.ஆர்.ரசீது கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலம் பத்தி 2ல் வாதி என்னை கிரையப் பத்திரத்திற்கு சாட்சி கையொப்பம் இட அழைத்தார் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சாட்சி பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்துவிட்டு இதில் விக்கிரய பத்திரம் என்று தான் போட்டிருக்கின்றது என்று கூறுகின்றார். எனக்கு விக்கிரய பத்திரத்திற்கும் விக்கிரய ஒப்பந்த பத்திரத்திற்கும் வேறுபாடு தெரியாததால் 23.04.2019 ஆம் தேதியன்று தயாரிக்கப்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரம் போலியானது என்றால் சரியல்ல. நான் 5 வது மட்டுமே படித்திருப்பதால் Agrement for sale என்பதை எப்படி படித்து நான் கையெழுத்திட்டேன் என்றால் அவர்கள் பேசியதை வைத்து பணம் கைமாறியதை வைத்து சொல்கிறேன். 30 லட்சம் ரூபாய் பணம் கொடுத்தார்கள். அதனை எந்த denomination ல் கொடுத்தார்கள் என்றால் 500 ரூபாய் தாளாக கொடுத்தார்கள். அது புது 500 ரூபாய் தாளா அல்லது பழைய 500 ரூபாய் தாளா என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை பொறுத்தவரை வாதி ஏற்கனவே வங்கியில் கடன் பெற்று அதன் பேரில் sarfeasi சட்டத்தின் கீழ் நடவடிக்கை இருப்பது எனக்கு தெரியாது. ஆனால் மார்க்கெட்டுக்கு எதிர் புறமாக உள்ள Bank of India வங்கியில் கடன் இருப்பது தெரியும். வங்கியில் sarfeasi சட்டத்தின் கீழ் நடவடிக்கை இருப்பதாக வாதி சொன்னாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கு பற்றி முன்னுக்கு பின்னாக முரணாக சாட்சியம் அளிப்பதால் என்னுடைய சாட்சியம் அனுமதிக்கப்படமுடியாதது என்றால் சரியல்ல.

(அறிவார்ந்த 2 மற்றும் 3 வது பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)